**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | |
|---|---|---|---|
| Sessions Case No. | : | 56/2023 | |
| | : | Prosecution - | **PW-6** |
| Deposition of witness for | : | Defense | |

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : சரவணா | | Father's Name : | |
| Village | : | | Taluk | : |
| Caste | : | | Calling | : |
| Religion | : | | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 19th day of August 2025.

ஆரம்பிக்கும் நேரம் **4.05** மணி

(1ம் எதிரி சக்திவேல், 2ம் எதிரி செல்வகுமார், 3ம் எதிரி ரஞ்சித்குமார் ஆகிய 1 முதல் 3 எதிரிகள் ஆஜர்)

(குழந்தைகள் மற்றும் சாட்சிகள் விசாரணை மையத்திலிருந்து சாட்சி விசாரிக்கப்படுகிறார். எதிரிகள் திரைமறைவில் அமர வைக்கப்பட்டுள்ளனர். சாட்சி தனியறையில் அமர வைக்கப்பட்டு, திரை விலக்கப்பட்டு, விசாரணை கீழ்க்கண்டவாறு தொடரப்படுகிறது)

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் உத்திரவு Crl.O.P.(MD) No.560 of 2025 நாள் 22.01.2025 சாட்சிகளை விசாரணை செய்ய உத்திரவிடப்பட்டு அதனடிப்படையில் சாட்சிகள் விசாரிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது தென்னிலை கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். 11.09.2022 ஆம் தேதி காளியாம்பாளையம் கிராம நிர்வாக அலுவராக பணியிலிருந்த போது எனக்கு உதவியாளராக ராஜாமணி என்பவர் இருந்தார். 11.09.2022 அன்று மதியம் 1.30 மணிக்கு நான் பணியிலிருந்த போது க.பரமத்தி நிலைய ஆய்வாளர் என்னை போன் மு்லம் அழைத்தார். குப்பம் கிராமத்தில் ஜெகநாதன் என்பவரை ஆக்சிடெண்ட்டில் இறந்துவிட்டார் என்பது சம்மந்தமாக விசாரணைக்கு வரும்படி ஆய்வாளர் என்னை அழைத்தார். நானும் எனது உதவியாளர் ராஜாமணியும் காருடையாம்பாளையம் பேருந்து நிறுத்ததிற்கு அன்றைய தினமே சென்றோம். அங்கு காவல் ஆய்வாளர் மற்றும் சில காவலர்களும் அங்கு இருந்தார்கள். அங்கு சக்திவேல் மற்றும் ரஞ்சித்குமார் என்று இரு நபர்களை காவல்துறையினர் கைது செய்து ஜீப்பில் வைத்திருந்தனர். அப்போது ஆய்வாளர் சக்திவேலை விசாரித்த போது சக்திவேல் தானாக முன்வந்து பின்வருமாறு வாக்குமூலம் கொடுத்தார். அவர் அன்னை

கிரசரில் வேலை செய்வதாகவும் அங்கு ஜெகநாதன் என்பவர் கிரசர் ஓட்ட முடியாமல் நிறைய புகார்கள் தெரிவிப்பதாக கூறினார். அதனால் அன்னை கிரசர் ஓனர் ஜெகநாதன் மேல் கோவமாக இருந்தார் எனக்கூறினார். 10 ஆம் தேதி மகேந்திரா பிக்கப் வேனை எடுத்துக்கொண்டு போய் ஜெகநாதன் மேல் இடித்து கொலை செய்ததாக கூறினார். சக்திவேல் கூறியதை டைப் அடித்தார்கள். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் என் உதவியாளரும் சாட்சியாக கையெழுத்து செய்தோம். காவல் ஆய்வாளரும் கையெழுத்து செய்தார். அப்போது ஆய்வாளருக்கு ஒரு போன் வந்தது. அன்னை கிரசர் உரிமையாளர் செல்வக்குமார் தோகைமலை அவென்யூ என்ற இடத்தில் பதுங்கி இருப்பதாக வந்த தகவலை அடுத்து அங்கு சென்றோம். அங்கு அன்னை கிரசர் ஓனர் செல்வக்குமாரை ஆய்வாளர் கைது செய்தார். செல்வக்குமாரை ஆய்வாளர் விசாரணை செய்தார். அவர் அதில் தான் அன்னை கிரசர் என்பதை நடத்தி வருவதாகவும் ஜெகநாதன் என்பவர் கிரசர் நடத்துவத்றகு அடிக்கடி தொந்தரவு செய்து வந்ததாகவும் கூறினார். அதனால் ஜெகநாதனை தீர்த்துக்கட்டினால் தான் கிரசரை தொடர்ந்து நடத்த

முடியும் என்று சொல்லி தன்னிடம் வேலை பார்க்கும் சக்திவேல் மூலமாக மகேந்திரா பிக்கப் வேனை எடுத்து சென்று ஜெகநாதன் மீது மோதி கொலை செய்துவிட்டதாக கூறினார். பின்னர் அவர் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை லேப்டாப்பில் டைப் அடித்து பிரிண்ட் எடுத்தார்கள். அதில் செல்வக்குமாரிடம் கையெழுத்து வாங்கினார்கள். நானும், எனது உதவியாளரும் சாட்சியாக கையெழுத்து செய்தோம். காவல் துறையினர் இது குறித்து அன்னைய தினமே என்னை விசாரித்தார்கள். **சக்திவேல் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் அது அ.சா.அ.17 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது உதவியாளர் கையெழுத்து அ.சா.ஆ.18 ஆக குறியீடு செய்யப்படுகிறது. செல்வக்குமார் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அது அ.சா.ஆ.19 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என் உதவியாளர் ராஜாமணியின் கையொப்பம் எனக்கு பின்னால் கையெழுத்து செய்யப்பட்டுள்ளது. **என் உதவியாளர் ராஜாமணியின் கையொப்பம் அ.சா.ஆ.20 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**<u>1 ஆம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

**<u>ஆரம்பிக்கும் நேரம் 4.25</u>**

11.09.2022 அன்று காலையில் எத்தனை மணியிலிருந்து உங்கள் அலுவலகத்தில் இருந்தீர்கள் என்றால் காலை 10.00 மணியிலிருந்து இருந்தேன். அன்றைய தினம் திங்கள் கிழமை என்று நினைக்கிறேன். சரியாக நினைவில்லை. பொதுவாக திங்கள் கிழமைகளில் நிறைய மனுக்கள் வரும் என்று சொன்னால் சரியல்ல. அன்றைய தினத்தில் அலுவலகத்தில் என்னென்ன வேலைகள் செய்தீர்கள் என்றால் இடப்பிரச்சனை சம்மந்தமாக உள்ள அலுவலக வேலையை பார்த்தேன். அன்றைய தினம் யார் யார் அலுவலகத்திற்கு என்ன வேலை நிமித்தமாக வந்தார்கள் என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது. மதியம் 1.30 மணிக்கு என்ன வேலை செய்து கொண்டிருக்கும் போது போன் வந்தது என்றால் என்னால் குறிப்பிட்டு சொல்லமுடியாது. குறிப்பிட்டு எந்தெந்த தினத்தன்று என்ன வேலை செய்தோம் என்று குறிப்பிட்டு சொல்ல இயலாது. எனக்கு தகவல் கிடைத்தவுடன் 10 நிமிடத்தில் நான் சென்றுவிட்டேன். நான் செல்வதற்கு முன்பு சக்திவேலிடம் ஆய்வாளர் என்ன கேட்டார் சக்திவேல் என்ன சொன்னார் என்ற விவரம் எனக்கு தெரியாது. எங்கு வைத்து சக்திவேலை காவல்துறையினர் கைது செய்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. அன்று மாலை 6.00

மணிக்கு மேல் ஆய்வாளர் என்னை காவல்நிலையத்தில் வைத்து விசாரித்தார். ஆய்வாளர் சக்திவேலிடம் கேள்வி கேட்டு அதனை ஆய்வாளர் குறித்துக்கொண்டார் என்றால் சரிதான். 6.00 மணிக்கு மேல் உங்களை ஆய்வாளர் லேப்டாப்பில் டைப் அடித்ததை கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரிதான். அ.சா.ஆ.17 முதல் 20 வரையுள்ள கையொப்பங்களை காவல்நிலையத்தில் வைத்து தான் கையெழுத்து செய்தேன். உங்கள் முன்னிலையில் சக்திவேல் எந்த ஒரு வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும் ஆய்வாளர் அதை பதிவு செய்யவில்லை என்றும் நீங்கள் முதல் விசாரணையில் கூறியதை போன்று நீங்கள் எதிலும் கையொப்பம் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

<u>2 மற்றும் 3 ஆம் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

<u>(மூத்த வழக்கறிஞரால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)</u>

நான் கடந்த 13 ஆண்டுகளாக கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வருகிறேன். கிராம நிர்வாக அலுவலராக பணியில் சேரும்போது கிராம நிர்வாக அலுவலரின் பொறுப்புகள், நிர்வாக நடைமுறை இது குறித்து மூன்று தொகுதி உடைய கையேடு வழங்கப்பட்டு அது குறித்து பயிற்சி அளிப்பார்கள் என்றால் சரிதான். எனக்கு மேல் அதிகாரி வருவாய் ஆய்வாளர் மற்றும் வட்டாட்சியர் ஆவார்கள்.

அன்றாட மனுக்களின் மீது நீங்கள் எடுக்கும் நடவடிக்கைகள் குறித்து வருவாய் ஆய்வாளர் அல்லது வட்டாட்சியருக்கு அறிக்கை அனுப்புவோம். காவல்துறை என்பது உங்கள் அலுவலகத்திற்கு சம்மந்தம் இல்லாத அந்நியத்துறை என்று சொன்னால் சரிதான். காவல்துறை அதிகாரி உங்களை அழைத்ததற்கு உங்கள் அலுவலக உயர் அதிகாரியிடம் அனுமதி பெற்றீரா என்றால் நான் வாய்மொழியாக தகவலை கொடுத்தேன். நீங்கள் எத்தனை மணிக்கு அலுவலகத்தை விட்டு சென்றீர்கள் எங்கு சென்றீர்கள் மீண்டும் அலுவலகத்திற்கு எத்தனை மணிக்கு வந்தீர்கள் என்ற விவரத்தை எழுத்து பூர்வமான அறிக்கையாக எனது மேலதிகாரிக்கு கொடுக்கவில்லை. காருடையாம்பாளையத்திற்கும் விபத்து நடந்த இடத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் அது எனக்கு தெரியாது. விபத்து நடந்து ஒரு மரணம் ஏற்பட்ட விவரம் தினசரி நாளிதழில் வந்தது என்று சொன்னால் சரிதான். அவ்வாறு கிடைத்த தகவலின் பேரில் நீங்கள் பதிவு செய்து உங்கள் மேலதிகாரிக்கு அறிக்கை செய்ய வேண்டும் என்று சொன்னால் அது குறித்து தெரியாது. காவல்துறையினர் இத்தனை மணிக்கு அழைத்துள்ளார்கள் என்ற விவரத்தை பதிவு செய்துள்ளேனா என்றால் நான் வட்டாட்சியரிடமும், வருவாய் ஆய்வாளரிடமும் போன் மூலம் தகவல் சொன்னேன். குற்றம் தொடர்புடைய தகவல் கிடைத்தால் நீங்கள் 3 பிரதிகளை தயார் செய்து ஒரு பிரதியை நீங்கள் அலுவலகத்தில்

வைத்துக்கொள்ளவேண்டும் என்றும் மற்ற பிரதிகளை உங்கள் மேலதிகாரிகளுக்கு அனுப்ப வேண்டும் என்று சொன்னால் அது பற்றி தெரியாது. நீங்கள் இந்தவழக்கில் காவல்துறையினருக்கு சாதகமாக சாட்சி சொல்ல வேண்டி அவ்வாறு இருக்கும் நடைமுறை பற்றி தெரியாது என்று சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. உங்களை காவல்துறையினர் அழைக்கவில்லை என்றும் எந்த இடத்திற்கும் செல்லவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. உங்கள் முன்பு வைத்து யாரிடமும் எந்தவொரு வாக்குமூலமும் பெறப்படவில்லை என்றும் அவை அனைத்தும் வழக்கிற்காக பின்னர் ஜோடனை செய்தவை என்று சொன்னால் சரியல்ல.

**நீதிமன்ற கேள்வி.**

எனக்கு 2, 3 ஆண்டுகள் ஆனதால் என் முன்பு வாக்குமூலம் கொடுத்த நபரை எனக்கு அடையாளம் தெரியாது.

**முடிவடையும் நேரம் : 4.40**

**ஒம்./- K.H.இளவழகன்,**
**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**கரூர்.**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | |
|---|---|---|---|
| Sessions Case No. | : | 56/2023 | |
| | : | Prosecution - | **PW-7** |
| Deposition of witness for | : | Defense | |

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : ஜெயபால் | Father's Name : | | |
| Village | : | Taluk | : | |
| Caste | : | Calling | : | |
| Religion | : | Age | : | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 19th day of August 2025.

ஆரம்பிக்கும் நேரம் **4.41** மணி

**(1ம் எதிரி சக்திவேல், 2ம் எதிரி செல்வகுமார், 3ம் எதிரி ரஞ்சித்குமார் ஆகிய 1 முதல் 3 எதிரிகள் ஆஜர்)**

(குழந்தைகள் மற்றும் சாட்சிகள் விசாரணை மையத்திலிருந்து சாட்சி விசாரிக்கப்படுகிறார். எதிரிகள் திரைமறைவில் அமர வைக்கப்பட்டுள்ளனர். சாட்சி தனியறையில் அமர வைக்கப்பட்டு, திரை விலக்கப்பட்டு, விசாரணை கீழ்க்கண்டவாறு தொடரப்படுகிறது)

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் உத்திரவு Crl.O.P.(MD) No.560 of 2025 நாள் 22.01.2025 சாட்சிகளை விசாரணை செய்ய உத்திரவிடப்பட்டு அதனடிப்படையில் சாட்சிகள் விசாரிக்கப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது கரூர் மாவட்ட புவியீர்ப்பு துறையில் துணை இயக்குநராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு 11.02.2021 முதல் 30.11.2023 வரை கரூர் மாவட்டத்தில் கனிம வளத்துறையில் துணை இயக்குநராக பணிபுரிந்தேன். கரூர் மாவட்டத்தில் உள்ள கல்குவாரிகள் அனைத்தும் கரூர் மாவட்ட கனிம வளத்துறைக்கு கட்டுப்பட்டதாகும். கரூர் மாவட்டத்தில் உள்ள கல்குவாரிகள் குறித்து வரும் புகார்கள் குறித்து ஆய்வு மேற்கொண்டு ஆய்வின் அடிப்படையில் நடிவடிக்கை எடுப்போம் அதன் அடிப்படையில் 22.08.2022 ஆம் ஆண்டு கரூர் மாவட்டம், கடவூர் வட்டம், குருணிகுளத்துப்பட்டி, தேவர்மலையைச் சார்ந்த மோகன்ராஜ் என்பவர் கரூர் மாவட்டம், புகளுர் வட்டம், குப்பம் கிராமம், பட்டா புலஎண்.682-ல் அமைந்துள்ள அன்னை புளூ மெட்டல்ஸ் நிறுவனம் குறித்தும், அதன் உரிமம் மற்றும் வெட்டி எடுத்த கற்கள் கோரி பதிவு அஞ்சல் மூலம் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் ஒரு மனுவை அனுப்பியுள்ளார். 08.09.2022 தேதியிட்ட கடிதத்தின் மூலம் மேற்படி தகவல்களை மோகன்ராஜ் என்பவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. மேலும் 08.09.2022 அன்று மேற்படி அன்னை புளூமெட்டல்ஸ்-க்கு நானும்

என்னுடன் உதவி புவியியலாளர் திரு.இளங்கோ, மற்றும் கனிம வள ஆய்வாளர் திரு.பாலசுப்பிரமணியம் ஆகியோரும் ஆய்விற்கு அன்னை புளூமெட்டல்ஸ்-க்கு சென்றோம். அன்னை புளூமெட்டல்ஸ் ஆய்வின் போது மேற்படி குவாரியில் எந்த பணியும் நடைபெறவில்லை. குவாரி செல்லும் வழியை கற்கள் கொண்டு அடுக்கி அங்கு யாரும் இல்லாததால் நாங்கள் அலுவலகத்திற்கு சென்று விட்டோம். 2 நாட்கள் கழித்து 10.09.2022 அன்று மாலை திரு.ஜெகநாதன் என்பவர் இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்ததாகவும் அன்னை புளூமெட்டல்ஸ் சம்மந்தமான 4 சக்கர வாகனம் அவர் மேல் மோதி இறந்துவிட்டதாகவும், அது குறித்து வேலாயுதம்பாளையம் காவல்நிலையத்தில் வழக்கு பதிவு செய்ததாக நான் கேள்விப்பட்டேன். இது குறித்து வேலாயுதம்பாளையம் காவல் ஆய்வாளர் 27.09.2022 அன்று நான் அலுவலகத்திலிருந்த போது என்னை விசாரணை செய்தார். உரிமம் காலம் முடிவடைந்ததாலும் விதிமுறை மீறல் இருந்ததாலும் அன்னை புளூமெட்டல்ஸ் செல்லும் வழியில் கற்கள் போட்டு மூடி வைத்தும் பின்னர் அன்னை புளூமெட்டல்ஸ்க்கு 83 லட்ச ரூபாய்க்கு மேல் அபராதம் விதிக்கப்பட்டது. அதில் 52 லட்சம் இதுவரை அன்னை புளூமெட்டல்ஸ்-ஆல்

செலுத்தப்பட்டுள்ளது.

1 ஆம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

இல்லை.

2 ஆம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை (மூத்த வழக்கறிஞரால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டது) தொடங்கும் நேரம் : 4.50

உங்களுக்கு நேரடியாகவும் மனுக்கள் வரும். முதலமைச்சருக்கு மனுக்கள் அனுப்பி அங்கிருந்தும் உங்களுக்கு மனுக்கள் வரும் என்று சொன்னால் சரிதான். மோகன்ராஜ் என்பவரால் தகவல் அறியும் சட்டத்தின் கீழ் தகவல் கேட்டு அதற்குரிய தகவலை அவருக்கு அனுப்பியுள்ளீர்கள் என்று சொன்னால் சரிதான். முதலில் ஒரு குவாரி ஆரம்பிக்கும் போது அதற்கு குவாரிக்காக உரிமம் கேட்கும் போது அந்த உரிமை கேட்கும் மனு மாவட்ட ஆட்சியருக்கு கொடுக்கப்படவேண்டும். அவ்வாறு கொடுக்கப்படும் மனுவில் குவாரி அனுமதி கோரும் நபர் 5 ஹெக்டருக்கு மேல் உள்ள நிலத்தில் குவாரி செய்ய வேண்டும் என்றால் அதனை சுற்றியுள்ள அனைத்து குவாரிகளையும் கருத்தில் கொண்டு அதை சுற்றியுள்ள ½ கிலோமீட்டர் சுற்றியுள்ள பொதுமக்களிடம் ஆட்சேபனை கேட்க வேண்டும். மோகன்ராஜ் என்பவர் எத்தனை குவாரிகள் இயங்கி

வருகிறது. எத்தனை குவாரிகள் இயங்காமல் உள்ளது என்று கேட்டு தகவல் அறியும் உரிமை சட்டத்தில் மனு தாக்கல் செய்துள்ளார் என்றால் இருக்கலாம். அன்னை புளூமெட்டல்ஸ் நிறுவனத்தில் உள்ள ஒரு பங்குதாரர் கார்த்திகா என்பவர் மோகன்ராஜ் தகவல் அறியும் உரிமம சட்டத்தில் கேட்ட தகவலையும் அதற்கு உரிய மனு இதுதான் என்று சொன்னால் சரிதான். அது எ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (3 தாள்கள் 6 பக்கம் கொண்டது.) அன்னை புளூமெட்டல்ஸ் குவாரிக்காக கொடுத்த மனு புல எண்.682 சம்மந்தப்பட்டது என்று சொன்னால் சரிதான். அந்த நிலத்தின் விஸ்தீரணம் 1.9 ஏக்கர் என்று சொன்னால் நான் ஆவணத்தை பார்த்தால் தான் என்னால் கூறமுடியும். அன்னை புளூமெட்டல்ஸ் குவாரி சம்மந்தமாக ஏற்கனவே மோகன்ராஜ் தகவல் கேட்டதை போலவே வேறு நபர் முதலமைச்சரின் தனிப்பிரிவுக்கு அனுப்பப்பட்ட மனு 03.09.2022 ஆம் தேதி உங்கள் அலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்று 05.09.2022 ஆம் தேதி குப்பம் கிராமத்தில்உள்ள அன்னை புளூமெட்டல்ஸ் கல்குவாரி நிறுவனம் குறித்து புலத்தனிக்கை மேற்கொள்ளப்பட்டது என ஒரு அறிக்கையை கொடுத்துள்ளீர்கள் என்று சொன்னால் உதவி புவியியலாளர் அவ்வாறு அறிக்கை கொடுத்துள்ளார் என்றால் பின்வருமாறு மேற்படி புலத்தணிக்கையின் போது புல எண்.682-

ல் குவாரி பணிகள் எதுவும் நடைபெறவில்லை. இருப்பினும் மேற்படி குவாரி குழிவாயில் மூடப்பட்டது. குவாரி குழிக்குள் வாகனங்கள் செல்லாதவாறு பாதைகள் துண்டிக்கப்பட்டுள்ளது. மேற்படி புல எண்ணில் குவாரிபணிகள் மேற்கொள்ளாதவாறு தொடர்ந்து கண்காணித்திட சம்மந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ள ஆவணம் இதுதான். அது எ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எங்கள் அலுவலகத்திலிருந்து அனுப்பப்பட்ட தகவல் அறியும் உரிமை சட்டத்தின் மூலம் அனுப்பப்பட்ட கடிதம் இது தான் அது எ.சா.ஆ.3 ஆகும். ஜெகநாதன் அனுப்பிய கடிதத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான் அது எ.சா.ஆ.4 ஆகும். (மொத்தம் 2 தாள்கள் 4 பக்கங்கள் கொண்டது). உங்கள புலத்தணிக்கையை 05.09.2022 ஆம் தேதியிலேயே முடித்து விட்டீர்கள் என்றும் இந்த வழக்கிற்காக 08.09.2022 ஆம் தேதி புலத்தணிக்கை செய்ததாக கூறுகிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. புலத்தணிக்கை செய்வது எதிர்தரப்பினருக்கு தெரியாமல் சென்று ஆய்வு செய்வது என்று சொன்னால் சரிதான். நான் சென்று பார்க்கும் போது எந்த பணியும் அன்னை புளுமெட்டல்ஸ் குவாரியில் நடைபெறவில்லை. எந்த தேதியில் 83 லட்சம் அபராதம்

விதித்தீர்கள், எந்த காலகட்டத்திற்காக மேற்சொன்ன அபராதம் விதித்தீர்கள் என்று நீங்கள் காவல்துறையினர் விசாரணையில் சொல்லவில்லை என்றால் ஆவணங்களை பார்த்து தான் என்னால் சொல்ல இயலும். அன்னை புளூமெட்டல்ஸ் நிறுவனம் மனு செய்ததற்காக பொதுமக்கள் ஆட்சேபனை கூட்டம் நடந்ததாகவோ, பொதுமக்கள் ஆட்சேபனை இருந்ததாகவோ எந்த குறிப்பும் இல்லை என்று சொன்னால் பொதுமக்களிடம் இருந்து ஒரு சில புகார் மனுக்கள் பெறப்பட்டது. 2022 க்கு முன்பு அன்னை புளூமெட்டல்ஸ் நிறுவனத்தில் யார் யார் பங்குதாரர்கள், அது எந்த வருடத்தில் தொடங்கப்பட்டது என்ற விவரம் உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது. அன்னை புளூமெட்டல்ஸ் நிறுவனத்திற்கு 2022 உரிமம் பெறக்கோரி எப்போது மனுதாக்கல் செய்தார்கள் அனுமதி எப்போது வழங்கப்பட்டது என்பது குறித்தும் அபராதம் எந்த நிறுவனத்தின் மீது எந்த பங்கு தாரர்கள் மீது அபராதம் விதிக்கப்பட்டது என்றால் ஆவணத்தை பார்த்துதான் கூற இயலும். 2 ஆம் எதிரி அன்னை புளூமெட்டல் நிறுவனத்திற்கு உரிமம் கோரி மனு செய்த பிறகு அவருக்கு உரிமம் வழங்கப்பட்ட காலம் வரை எந்த குவாரி நடவடிக்கையும் செய்யவில்லை என்றும் அபராதம் 2 ஆம் எதிரியின் நிறுவனத்தின் மீது விதிக்கப்படவில்லை என்றும் விதிமீறல் என்று சொல்லப்படும் காலத்திற்கும் இந்த காலத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் நான் ஆவணத்தை பார்த்தால் தான் சொல்ல முடியும்.

<u>3 ஆம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

இல்லை.

விசாரணை முடிவடையும் நேரம் : 5.20

**ஒம்./- K.H.இளவழகன்,**

**முதன்மை மாவட்ட நீதிபதி,**

**கரூர்.**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | |
|---|---|---|---|
| Sessions Case No. | : | 56/2023 | |
| | : | Prosecution - | **PW-8** |
| Deposition of witness for | : | Defense | |

| | | | |
|---|---|---|---|
| Name | : நளினி | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 19th day of August 2025.

ஆரம்பிக்கும் நேரம் **5.20** மணி

**(1ம் எதிரி சக்திவேல், 2ம் எதிரி செல்வகுமார், 3ம் எதிரி ரஞ்சித்குமார் ஆகிய 1 முதல் 3 எதிரிகள் ஆஜர்)**

(குழந்தைகள் மற்றும் சாட்சிகள் விசாரணை மையத்திலிருந்து சாட்சி விசாரிக்கப்படுகிறார். எதிரிகள் திரைமறைவில் அமர வைக்கப்பட்டுள்ளனர். சாட்சி தனியறையில் அமர வைக்கப்பட்டு, திரை விலக்கப்பட்டு, விசாரணை கீழ்க்கண்டவாறு தொடரப்படுகிறது)

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் உத்திரவு Crl.O.P. (MD) No.560 of 2025 நாள் 22.01.2025 சாட்சிகளை விசாரணை செய்ய

உத்திரவிடப்பட்டு அதனடிப்படையில் சாட்சிகள் விசாரிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது கடலூர் ஊராட்சி ஒன்றியத்தில் துணை வட்டார வளர்ச்சி அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 15.08.2022 ஆம் தேதியன்று க.பரமத்தி ஊராட்சி ஒன்றியத்தில் மண்டலம் 3 துணை வட்டார வளர்ச்சி அலுவலராக பணிபுரிந்தேன். என்னுடைய பணியின் போது 6 பஞ்சாயத்துகள் க.பரமத்தி ஊராட்சி ஒன்றிய வரம்புக்கள் இருந்தது. குப்பம் கிராமமும் மேற்சொன்ன க.பரமத்தி ஊராட்சி ஒன்றியத்தில் தான் அமைந்துள்ளது. ஆகஸ்ட் 15, 2022 ஆம் தேதியன்று குப்பம் கிராமத்தில் கிராம சபை நடைபெற்றது. வழக்கம்போல் ஆகஸ்ட் 15 ஆம் தேதி எப்பவும் போல் கிராம சபை கூட்டம் நடைபெற்றது. நான் கிராம சபை தலைவர் நடத்துவார். நான் பார்வையாளராக செல்வேன். கிராம சபை கூட்டம் கூடும் போது மனுக்கள் ஊர் பொதுமக்கள் கொடுப்பார்கள். ராமசாமி மகன் ஜெகநாதன் அன்னை புளூமெட்டல்ஸ் நிறுவனத்தை மூட வேண்டும் என்று கிராம சபையில் மனு கொடுத்தார். ஜெகநாதன் புளூமெட்டல்ஸ் நிறுவனத்தை நடத்துவதால் சுற்றுச்சூழலை பாதிக்கபடுவதாக தெரிவித்ததால் சுற்றுச்சூழலை பாதிக்க கூடாது என்று

அந்த நிறுவனத்திற்கு கூறிவிடுகிறோம் என்று கிராம சபையில் கூறினோம். காவல்துறையினர் என்னை இது சம்மந்தமாக விசாரித்தார்கள்.

1 ஆம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

இல்லை.

2 ஆம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை (மூத்த வழக்கறிஞரால் விசாரணை செய்யப்படுகிறது) ஆரம்பிக்கும் நேரம் : 5.26

பற்றாளர் என்றால் கிராம சபை கூடுகிறதா என்று பார்க்கும் நபர். நான் அரசு ஊழியர். எனக்கு நேரடி மேலதிகாரி வட்டார வளர்ச்சி அலுவலர் ஆவார். ஆகஸ்ட் 15 என்பது ஒரு பொது விடுமுறை நாள் என்று சொன்னால் சரிதான். கிராம சபை கூட்டத்திற்கு சென்றதற்காக ஆவணம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. தீர்மானத்தில் நான் கையொப்பம் செய்துள்ளேன். காவல் துறையினர் உங்களை விசாரித்த போது ஜெகநாதன் என்பவருடன் பெரியசாமி வந்து பெரியசாமிதான் மனு கொடுத்துள்ளார் என்று கூறியுள்ளீர்கள் என்று சொன்னால் சரிதான். அந்த மனுவை காவல்துறை அதிகாரிகளிடம் நீங்கள் கொடுக்கவில்லை என்று சொன்னால் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் அந்த மனுவை கொடுத்துள்ளேன்.

குப்பம் கிராமத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட குவாரிகள் உள்ள விவரம் உங்களுக்கு தெரியும் என்றால் சரிதான். அனைத்து குவாரிகளும் சின்னசின்ன குவாரிகள் என்றும் அரை கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது என்றால் சரிதான். அந்த இடத்தில் 20 குவாரியும் கிரசரும் உள்ளது என்று சொன்னால் குவாரிகள் உள்ளது எண்ணிக்கை எனக்கு தெரியாது. அங்கு கிரசரும் உள்ளது என்று சொன்னால் கிரசர் உள்ளது. மனு ஜெகநாதனால் கொடுக்கப்பட்டது என்று முதல் விசாரணையில் வழக்கிற்காக கூறியுள்ளீர்கள் என்றால் சரியல்ல மனுவை இரண்டு பேர் தலைவரிடம் கொடுத்தார்கள். அந்த மனுவை நான் வாங்கவில்லை.

<u>3 ஆம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

இல்லை.

**ஓம்./- K.H.இளவழகன்,**

**முதன்மை மாவட்ட நீதிபதி,**

கரூர்.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | |
|---|---|---|---|
| Sessions Case No. | : | 56/2023 | |
| | : | Prosecution - | **PW-9** |
| Deposition of witness for | : | Defense | |

| | | | |
|---|---|---|---|
| Name | : S. சரவணன் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 19th day of August 2025.

ஆரம்பிக்கும் நேரம் **5.35** மணி

**(1ம் எதிரி சக்திவேல், 2ம் எதிரி செல்வகுமார், 3ம் எதிரி ரஞ்சித்குமார் ஆகிய 1 முதல் 3 எதிரிகள் ஆஜர்)**

(குழந்தைகள் மற்றும் சாட்சிகள் விசாரணை மையத்திலிருந்து சாட்சி விசாரிக்கப்படுகிறார். எதிரிகள் திரைமறைவில் அமர வைக்கப்பட்டுள்ளனர். சாட்சி தனியறையில் அமர வைக்கப்பட்டு, திரை விலக்கப்பட்டு, விசாரணை கீழ்க்கண்டவாறு தொடரப்படுகிறது)

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் உத்திரவு Crl.O.P. (MD) No.560 of 2025 நாள் 22.01.2025 சாட்சிகளை விசாரணை செய்ய

உத்திரவிடப்பட்டு அதனடிப்படையில் சாட்சிகள் விசாரிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது முதல்நிலை ஆய்வாளராக பட்டுக்கோட்டை வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் பணிபுரிந்த வருகிறேன். கடந்த 27.09.2022 அன்று கரூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளராக பணியிலிருந்தேன். அப்போது கரூர் பரமத்தி காவல்நிலைய குற்ற எண்.115/2022 வழக்கில் சம்மந்தப்பட்ட TN 47 AB 3133 Honda Shine மற்றும் TN 47 BY 2877 மகேந்திரா பொளிரோ பிக்கப் ஆகிய இரண்டு வாகனங்களையும் க.பரமத்தி காவல்நிலைய வளாகத்தில் வைத்து வானத்தை தணிக்கை செய்து மேற்சொன்ன 2 வாகனங்களுக்கும் அறிக்கை கொடுத்தேன். **TN** 47 **BY** 2877 என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை 27.09.2022 அன்று வழங்கினேன். அது இதுதான் அ.சா.ஆ.21. மேலும் **TN** 47 **AB** 3133 என்ற வாகனத்திற்கு நான் வழங்கிய தணிக்கை அறிக்கை இது தான் அது அ.சா.ஆ.22 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>1 முதல் 3 எதிரிகளுடைய பொதுவான குறுக்கு விசாரணை (மூத்த வழக்கறிஞரால் விசாரணை செய்யப்படுகிறது)</u>**

அ.சா.ஆ.21 மற்றும் 22 ஆகிய அறிக்கைகள் தாயர் செய்வதற்கு முன்பாக மேற்சொன்ன வாகனங்களை முழுமையாக ஆய்வு செய்து குறிப்பு எடுத்து அறிக்கை தயார் செய்தீர்கள் என்றால் சரிதான். நீங்கள் கொடுத்த அறிக்கைகளுடன் நீங்கள் தயாரித்த குறிப்பு அறிக்கைகளை உடன் இணைக்கவில்லை என்று சொன்னால் சரிதான். நீங்கள் சம்பவ இடத்திற்கு சென்று அங்கு விபத்து எவ்வாறு நடந்தது என்ற விவரங்களை காவல்துறையினரிடம் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். TN 47 BY 2877 என்ற வாகனம் கண்மணி எர்த் மூவர்ஸ் பிரைவட் லிமிடெட் என்ற நிறுவனத்திற்கு சொந்தமானது என குறிப்பிட்டுள்ளீர்கள் என்று சொன்னால் சரிதான். பொதுவாக ஒரு வாகனம் நகர முடியாத நிலையில் உள்ளது என்று சொல்ல வேண்டும் என்றால் இன்ஜினை இயக்கி பார்க்க வேண்டும் என்று சொன்னால் சரிதான். Static Condition என்றால் நகற்ற முடியாத நிலையில் உள்ளது என்றால் சரிதான். நீங்கள் மேற்சொன்ன வாகனத்தை தணிக்கை செய்தவற்கு முன்பாக மேற்சொன்ன வாகனம் காவல்நிலையத்திற்கு வந்தது என்றும் எந்த நிலையில் வந்தது என்று தெரிந்துகொண்டீர்களா என்றால் நான் காவல்நிலையத்தில் வாகனம் இருந்தது அதைத்தான் நான் தணிக்கை செய்தேன். Bolero Pickup ல்

மூன்று விதமான வாகனங்களின் வகைகள் உள்ளது என்று சொன்னால் சரிதான். Bolero City Pickup என்ற வாகனத்திற்கு டயர் குறிப்பிட்ட அளவை கொண்டது என்று சொன்னால் சரிதான். Bolero Pickup வாகனத்தில் டயர் எந்த நிறுவனத்தினால் செய்யப்பட்ட டயர் என்று நீங்கள் ஆய்வில் கண்டறியவில்லை என்று சொன்னால் சரிதான். பொதுவாக இது போன்ற நிறுவனங்கள் டயரை re-treding செய்து பயன்படுத்துவார்கள் என்று சொன்னால் சரிதான். மீதியுள்ள டயர்களில் காற்றின் அழுத்தம் எவ்வளவு இருந்தது என்றால் 3 டயர்களில் காற்று இருந்தது. ஒரு டயர் கிழிந்திருந்தது. முன்சக்கரத்திற்கு காற்று அழுத்தமும் பின் சக்கரத்திற்கு காற்று அழத்தமும் தனித்தனியே உள்ளது என்றால் சரிதான். வாகனத்தில் இருந்த டயர்கள் புதியதா அல்லது பழையதா என்று குறித்துக்கொள்ளவில்லை என்று சேர்னனால சரிதான். பொதுவாக சாலை சரியாக இல்லாமல் இருந்தால் டயர்கள் வெடிக்க வாய்ப்புள்ளது என்று சொன்னால் கூர்மையான பொருட்கள் மீது மோதும் போது வெடிக்க வாய்ப்புள்ளது. டயர் வெடித்தால் வாகனம் இயக்குபவரின் கட்டுப்பாட்டில் இருக்காது என்று சொன்னால் சரிதான். இருசக்கர வாகனத்தின் பிரேக் எந்த அளவில் உப்யோகிக்கம் நிலையில் இருந்தது என்று பார்த்து

குறிப்பெடுக்கவில்லை.

நீதிமன்ற கேள்வி

TN 47 BY 2877 என்ற வாகனத்தில் எந்த டயர் கிழிந்திருந்தது என்றால் முன்பக்க இடது புற டயர் கிழிந்திருந்தது. முன்பக்க இடது புற டயர் வெடித்திருந்தால் இடது புறமாகத்தான் சென்றிருக்க முடியும். டயர் வெடித்திருந்து மேலும் வண்டி ஓட்டியிருந்தால் டயர் வெடித்து நார்நாராக போகும் என்றால் சரிதான். TN 47 BY 2877 என்ற வாகனத்தின் டயர் நார்நாராக கிழியவில்லை. ஒருபக்கம் தான் கிழிந்திருந்தது.

1 முதல் 3 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை

எந்த பக்கம் கிழித்திருக்கிறதோ அந்த பக்கத்தில் தான் செல்லும் என்று அனுமானத்தில் சொல்லவில்லை. எந்த பக்கத்தில் காற்று குறைவாக உள்ளதோ அந்தப்பக்கம் தான் செல்லும் என்று இயற்பியலின் படி கூறுகிறேன். முடிவடையும் நேரம் : 5.55.

**ஒம்./- K.H.இளவழகன்,**

**முதன்மை மாவட்ட நீதிபதி,**

**கரூர்.**